Embassy of the United States of America

Colombo

# PRESS RELEASE

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070

Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160426

## கடற்படை அதிகாரி கில்ரைனின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான விஜயம்

**ஏப்ரல் 26, 2016:** பசுபிக் (SOCPAC) பிராந்திய ஐக்கிய அமெரிக்க விசேட செயல்பாட்டு கட்டளை அதிகாரி கொலின் ஜே . கில்ரைன், ஏப்ரல் 20-23 வரையான காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தனது நான்கு நாள் பயணத்தை பூர்த்தி செய்தார். இவ் விஜயத்தின்போது இலங்கை மற்றும் மாலைதீவு பாதுகாப்புப் படையினர் எதிகாலத்தில் ஆற்றக்கூடிய மனதாபிமான உதவிகள், இயற்கை அனர்த்த எதிர் வினைச் செயற்பாடுகள், மற்றும் பாதுகாப்பு செயல்பாட்டு ஒத்துழைப்பை அதிகரித்தல் என்பவை தொடர்பாக கடற்படை அதிகாரி கில்ரைன் கலந்துரையாடினார்.

"இந்து சமுத்திரத்தின் மிக முக்கிய கப்பல் மார்க்கத்திநூடாக சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான கப்பற்பிரயாணங்களை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியமானது கடற் பிராந்திய பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் நிலையாகவுள்ளது." என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் தெரிவித்தார்.

கடற்படை அதிகாரி கில்ரைனின் மாலைதீவு விஜயமானது மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையின் 124 வது ஆண்டு விழா தினத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். பிற்பாடு, அவரது இலங்கை விஜயமானது பக் போயா தினத்தில் இடம்பெற்றதுடன் இலங்கை கடற்படை மற்றும் விமானப்படயினரையும் சந்தித்தார்.

# # #